பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஆ புரட்டாதி மீ 31 உ. புதன்கிழமை (17 10 1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 27 கதிர் 224

# பலாலி, காங்கேசன்துறையில் நேற்று அகோர வான் தாக்கு!

## வீடுகள், கட்டடங்கள் சேதமாகின

காங்கேசன்துறை, அக். 17

பலாலி, காங்கேசன்துறை முகாம்களை அண்டிய பகுதிகளில் நேற்று நண்பகல் முதல் மாலைவரை தொடர்ந்து அகோர விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இதனால் இப்பகுதிகளில் பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் தகர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன,

பலாலி முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படைகளுக்கும் இடையில் நேற்று போதல்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் நண்பகல் 1 30 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதனால் மயிலிட்டிப் பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

அதன் பின்னர் அவ்ரோ விமானம் அகோரமாக குண்டுகளை வீசியது.

பிற்பகல் 2 மணியளவில் கட்டுவன் பகுதியில் அவ்ரோ விமானம் அடுத்தடுத்து 5 குண்டுகளை வீசித் தள்ளியது. பின்னர் பலாலிக்குச் சென்ற அவ்ரோ மீண்டும் வந்து 5

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சீனச் சகடையை நோக்கி பலாலியில் புலிகள் தாக்கு!

யாழ்ப்பாணம், அக். 17

பலாலி முகாம் பகுதியில் நேற்று சினத்தயாரிப்பு சகடை விமானத்தை நோக்கி விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தாக்குதலில் விமானம் சேதமுற்றதா என்பதை உர்ஜிதப் படுத்த முடியவில்லை.

ஆனால் —

பலாலி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 4 படையினர் காயமடைந்தனர் என்றும் –

அத்தாக்குதலின் போது துருப்புக்களை ஏற்றப் பயன்படுத்தப்படும் சீன ரக விமானம் ஒன்று சேதமேற்படாமல் தப்பிப் பயணமானது என்றும் ஸ்ரீலங்காப் படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

## வலி. வடக்கில் நேற்றும் ஹெலி, ஷெல் தாக்குதல்கள்

காங்கேசன்துறை, அக். 17

வலி. வடக்கில் நேற்றும் இடைவிடாத ஹெலித் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

காலை 9 மணிக்கு ஆரம்பமான ஹெலித் தாக்குதல் இடைவெளி விட்டுவிட்டு பிற்பகல் வரை இடம்பெற்றது.

பலாலியிலிருந்து விமானங்கள் புறப்படும்போது சுற்றாடல் பகுதிகளில் ஹெலியிலிருந்து மிகவும் பயங்கரமாக கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கட்டுவன், மயிலிட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறைப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல் இடம்பெற்ற அதே வேளை ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இதனால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றன. பொதுமக்களில் சிலரும் காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய தீபாவளி: கொண்டாடலாமா?

யாழ்ப்பாணம், அக். 17

இன்று தீபாவளித் திருநாளாகும்.

வழமையான குதூகலம் எதுவும் இன்றியே இன்றைய தீபாவளி அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டிகை எதையும் கொண்டாடக் கூடிய புறச் சூழ்நிலை –இயல்பு நிலை– எதுவுமே இல்லாத இந்த நெருக்கடி மிகுந்த காலத்தில், தீபாவளியைக் கொண்டாடுவது என்ற எண்ணம் மக்களிடம் இருக்கக் காணவில்லை.

வானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் எதுவும் இல்லாமல் இருந்தால் அதுவே ஒரு கொண்டாட்டம் தானே என்று மக்களில் பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

லட்சக் கணக்கான எமது மக்கள் அகதிகளாகியிருக்கும் இவ்வேளையில், ஆயிரக் கணக்கான தமிழர்கள் படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவிப்பு

கொழும்பு. அக். 17

புங்குடுதீவு, மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, யாழ்ப்பாணம் நகர உதவி அரசாங்க பிரிவு ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை ஆறு மணி முதல் அமுலுக்கு வந்துள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்றும்–

இப்பிரிவுகளில் வாழும் மக்கள் இக்காலத்தில் வீடுகளுக்குள் இருக்கவேண்டும் என்றும் கொழும்பில் உள்ள கூட்டுப் படைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது. (ஒ-எ)

## ஆஸ்பத்திரிக் கூரையிலும் வெடிக்காத ஷெல்!

யாழ்ப்பாணம், அக். 17

யாழ். போதனா வைத்திய சாலை கூரையில் சிக்கி இருந்த வெடிக்காத ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

21 ஆம் வார்ட் கூரைப் பகுதியில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த வேளை, சிதறிக் கிடந்த ஓடுகளுக்கு இடையில் இந்த ஷெல் விகிறி உடைந்த நிலையில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

ஏற்கனவே வெடிக்காத இரண்டு ஷெல்கள் ஆஸ்பத்திரியில் இருந்து மீட்கப்பட்டன என்பது தெரிந்ததே. [ஒ-15]

## ஊரிக்காட்டில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், அக். 17

வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் (திங்கள்) மாலை 2 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தின.

இப்பகுதியில் குண்டுகள் வீசப்பட்டதில் இரு வீடுகள் சேதமுற்றன. (ஒ-3)

## நகரத்தில் சில பகுதிகளுக்கு இன்று 3 மணிநேர மின்சாரம்

யாழ்ப்பாணம், அக். 17

யாழ். நகரத்தின் சில பகுதிகளுக்கு இன்று தொடக்கம் காலை 9 மணிமுதல் 12 மணி வரை தினசரி 3 மணி நேரம் மின்சாரம் விநியோகிக்கப்பட இருக்கிறது.

தட்டாதெரு, கண்ணாபுரம், அராலி வீதி, கச்சேரியடிப் பகுதி, முத்திரைச் சந்தி பகுதி போன்ற உப-மின் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கே இன்று மின்சாரம் கிடைக்க இருக்கிறது.

இதேவேளை —

வட்டுக்கோட்டை உபமின் நிலையம் உட்பட சுன்னாகம் முதல் தட்டாதெரு வரையான பகுதிகளுக்கு நேற்று மின்சார விநியோகம் வழங்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது. (ஒ-3)

## மின்சாரம் வருகிறது! பாவனையாளரே கவனம்!!

### சேதங்களை உடன் அறிவியுங்கள்

யாழ்ப்பாணம், அக். 17

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட எல்லாப்பகுதிகளுக்கும் எந்த நேரத்திலும் மின்சார விநியோகம் கிடைக்கலாம்.

பாவனையாளர்களே கவனம்! உங்கள் வீடுகளில் மின் இணைப்புகள், வயர்கள் மின் அழுத்திகள் [சுவிட்சுகள்] மின் மானிகள் [மீட்டர்கள்] போன்றவை இராணுவ தாக்குதல்களால் சேதமுற்றிருக்கக்கூடும் என்றும்—

மின்சாரம் திடீரென விநியோகமாகும் போது அந்தச் சேதங்களால் பாவனையாளருக்கு உயிராபத்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊர்காவற்றுறையை அண்டிய கிராமங்களினுள் நுழைய இராணுவத்தினர் முயற்சி

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அயற்புற கிராமங்களினுள் செல்வதற்கு முயற்சி எடுத்துவருகின்றனர்.

இதனை அறிந்த முகாமை அண்டிய கிராமப்புற மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேற முற்படுகின்றனர்.

முகாமையண்டிய சில பகுதிகளில் நுழைந்த இராணுவத்தினர், அங்குள்ள வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை —

சின்னமூளாய்ப் பகுதியை நோக்கிப் படைகள் முன்னேறி வருகின்றனர் என்று நேற்றுப் பரவிய தகவல் ஒரு வதந்தி எனப் பின்னர் தெரிய வந்தது. [ஒ-3-5]

## 2ஆம் தர அதிபர் பதவிக்கு தெரிவானோர் பட்டியல்

யாழ்ப்பாணம், அக் 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் தர அதிபர்களாகப் பணிபுரிவதற்கு 93 பேர்களை கல்விச்சேவை ஆணைக் குழு தெரிவு செய்துள்ளது.

இவர்களுடைய சுயவிவரக் கோவைகள் பரிசீலனை செய்யப்பட்டு, வேண்டிய தகைமைகள் இருப்போருக்கு நியமனம் வழங்கப்படும் என்று யாழ். கல்விப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளானவர்களுக்கு நியமனம் வழங்கப்படமாட்டாது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டாம் தர அதிபர்கள் வேலணைக் கோட்டம், வடமராட்சி கிழக்கு உட்பட மற்றும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் தர அதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் முப்பது பேரின் பெயர், தற்போதைய பாடசாலை பற்றிய விவரம் வருமாறு:-

ஏ சி. ஜலீல் (மீசாலை, விக்கினேஸ்வரா), எல். எம். அஹமது பசீர் (ஆணைக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### TOEFL

கலாநிதி போட்டரினால் நடாத்தப்படும் வார இறுதிப் பயிற்சி வகுப்புக்கள் 20 - 10 - 90 அன்று ஆரம்பமாகும். சில வெற்றிடங்களே உண்டு தொடர்பு: இவ்லின் இரத்தினம் நிறுவனம், டயஸ் வீதி, (பல்கலைக்கழக ஒழுங்கை) திருநெல்வேலி. (14466)

### பரிஸ் ரெக்ஸ்

105 அரசடி வீதி, தட்டாதெரு, பிரவுண் வீதி, சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம் (14446)

### ஸ்ரார் வாச் வேக்ஸ்

மீண்டும் இயங்குகின்றது வாடிக்கையாளர்களே! உங்கள் கடிகாரங்களை விரைவாக மீட்டுக் கொள்ளவும். ஸ்ரார் வாச் வேக்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (14487)

### பிரத்தியேக ஆங்கிலக் கல்வி

சகல கரத்தினருக்கும் பிரத்தியேக ஆங்கில வகுப்பு திறமையுள்ள ஆசிரியரினால் வீடு சென்று கற்பிக்கப்படும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செ. பாஸ்கரன், வேளாந்தோட்டம், கல்வியங்காடு, யாழ்ப்பாணம் (14419)

### போட்டோஸ்ரற்

தரமாக எந்த அளவிலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் முன்பக்கம், மக்மிலன் புத்தகசாலை, ஓட்டுமடம். (சி/5314)

### முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனம் பழைய இடத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் தேவைகள் யாவும் மனத்திருப்தியுடன் செய்துகொள்ள எம்மை நாடுங்கள் ஸ்ரீலங்கா அச்சகம், 234 A, K KS, வீதி, யாழ்ப்பாணம். (13897)

### மணமக்கள் தேவை

வேளாள கிரகபாவமற்ற வர்த்தருக்கு 35 வயதிலும், செவ்வாய் தோஷ ஆசிரியருக்கு 29 வயதிலும் மணமக்கள் தேவை. சைவ மணமக்களும் உள்ளனர். வைரோதயன் திரு வீதி, உரும்பிராய் வடக்கு (14475)

### தவறிவிட்டது

கணபதி ராமச்சந்திரன் இல 500018321 X உடைய அடையாள அட்டை 16 - 10 - 90 அன்று சாவகச்சேரி சந்தையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தவளையந்றாவளை, மந்துவில், கொடிகாமம், என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், [14474]

### நிலவே நீ மயங்காதே

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண்மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள் தூர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (14387)

## வெளிமாவட்ட காசோலைகள் ஏற்க மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 17

வெளிமாவட்ட காசோலைகளை ஏற்க யாழ். நகர வங்கிகளில் மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது.

தபால் சேவை சீரில்லாததாலும், போக்குவரத்து வசதி இல்லாததாலுமே வெளிமாவட்ட காசோலைகளை ஏற்கமுடியாதுள்ளதாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-3)

## கப்பலில் வரும் உணவுப்பொருள் பளைக்கும்!

யாழ்ப்பாணம், அக். 17

பருத்தித்துறைக்கு இவ்வாரம் வந்து சேரவிருக்கும் கப்பலில் வரும் உணவுப் பொருள்களில் 125 தொன் உணவுப் பொருள்களும், 20 பரல் மண்எண்ணெயும் கிளிநொச்சிமாவட்ட பளைப் பகுதிக்கு வழங்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கு உணவுப்பொருள்கள் அனுப்ப முடியாத நிலையிலிருப்பதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [ஓ-3]

## கடற்படையால் தாக்கப்பட்ட வயோதிபர்

வல்வெட்டித்துறை, அக். 17

கடந்த புதன்கிழமை காலை கட்டுமரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொலிகண்டி குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கடற்படை வீரர்களினால் தாக்கப்பட்டு இம்சைப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதிமீனவர்கள் தொழில் செய்ய அச்சமடைந்துள்ளனர். (உ-160)

## 3 ஹெலிகள் தாக்குதல்

பருத்தித்துறை, அக். 17

அந்தணத்திடல் பகுதியிலும் ஓராண்டான் பகுதியிலும் ஞாயிறு காலை 9 15 மணியிலிருந்து 10 30 மணி வரை மூன்று ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தின. [ஓ 118]

# ஓராண்டு நினைவாக அஞ்சலி

17 - 10 - 1990

## அமரர் சபாபதி தங்கராசா

உடுவில் தெற்கு

(பிரதம எழுதுவினைஞர் - நாரசாவல் திணைக்களம், திருகோணமலை)

### விண் புகழ வாழ்வாய்!

ஆண்டொன்று கடந்த தய்யா அகிலத்தில் நீயகன்று
தூண்டு புகழ்ந்த தங்க ராசத்துரையே தூயவனே! - (நீ)
பூண்ட உன் பெருமையெல்லாம் பாரிலின்று பேசிடவே
ஈண்டிருந்து ஏங்குகின்றாள் இல்லத்தாள்
கமலாவும் - நாம்
கூண்டதனில் கிளியாக - துவலயத்தில் தனியாக - நீ -
தாண்டரிய பிறவி தப்பி தனியாக விண்ணாள, உனைத்
தூண்டியவர் யார் ஐயா - தங்கமான ராசாவே?
நீண்ட பெரும் பயணம் நீ ரியற்றிச் சென்றாலும்
ஆண்டொன்று கழிந்தாலும், அன்பதனை
மறப்போமோ!
வேண்டுகின்றோம் விமலனவன் விண்ணார்ந்த
பொற்பாதம்
வேண்டுகின்றோம் வேண்டுகின்றோம் விண்புகழே
நீ வாழு!

— சாந்தி! —

அன்பு மனைவி
திருமதி கமலா தங்கராசா,
திருக்க சபாபதி குடும்பம்,
உற்றார், உறவினர்.

தாவடி,
கொக்குவில் [14450]

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / ஏனையதுறைகளில்

## எழுதுவினைஞர்களுக்கான போட்டிப்பரீட்சை

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான 2 மாத

# விசேட பயிற்சி வகுப்புகள்

திறமை வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை

ஆரம்பம்: 20 — 10 — 90 முற்பகல் 9மணி

பாட நெறி: மொழித்தேர்ச்சி,
எண்திறனும் பொது விவேகமும்.

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வாரத்தில் 3 நாட்கள் மு. ப. 9 — 12 மணி வரை
★ கட்டணம் ரூபா 250. 00 (முழுப் பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:- நேரில் [மு. ப. 9 — 11]

# ★ அஸ்ரன் இன்ஸ்ரியூட் ★

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) [சி-5310]

### மண்டைதீவில் நிவாரணம்

மண்டைதீவு, அக். 17

மண்டைதீவில் ப. நோ. கூ. சங்கத்தின் மண்டைதீவு கிளைகள் இரண்டிலும் தற்பொழுது மூன்றாம் கட்ட நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஓ - 88)

## அறிவித்தல்

சிவலிங்கம் வைத்தியசாலை மீண்டும் கணக்கர் சந்தியில் இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்.

(14399)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சோ. யோகசுந்தரம்

(முன்னைநாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினி பஸ் உரிமையாளரும்)

அன்னையின் மடியில் 09 - 11 - 1952 அந்நியர் அழிப்பில் 21 - 10 - 1987

திதி:- 17 — 10 — 1990

உங்கள் புன் சிரிப்பை நாம் மறக்கவில்லை
உங்கள் பொன் உடலை நாம் பார்க்கவில்லை
என்றும் உங்கள் எண்ணங்கள்
எமை விட்டு நீங்கவில்லை
எமை மறந்து எங்கேதான் சென்றீர்களோ
மூன்று வருடங்கள் என்ன
முப்பது வருடங்கள் ஆனாலும்
உங்கள் நீங்காத நினைவுகள் எங்களை வாட்டுதே
நல்லவர்க்கு இவ்வுலகில்
வாழ்க்கை இல்லை என எண்ணி
இவ் உலகை விட்டு மறைந்தீர்களோ
பாசமுடன் எங்களுடன் வாழ்ந்தீர்களே
பரிதவிக்கின்றோம் நாம் உங்களை நினைந்து

குடும்பத்தினர்.

"யோகா இல்லம்"
24/3, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [14480]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 - 12 - 1965

மறைவு: 21 - 10 - 1987

திதி சதுர்த்தசி: 17 - 10 - 1990

செல்வன்

## சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரன் (சந்திரன்)

அன்பின் சந்திரனே
ஆண்டவனே படைத்தான் - உனை
மீண் (டும்) டவனே எடுத்து விட்டான்
வேண்டி நிற்கின்றோம் உனக்காக
யாண்டு மடைக உன் ஆத்மா

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், சிறியதந்தையர், சிறியதாய்மார், மாமன்மார், மாமிமார், மச்சான், மச்சான்மார், சிந்து, உற்றார், உறவினர், நண்பர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில். (14477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இன்றைய தீபாவளி

இன்று தீபாவளித் திருநாள். இந்துக்களுக்குரிய பண்டிகைகளில் ஒன்று அக்கிரமமும், அநீதியும் அடக்குமுறையும் என்றாவது ஒருநாள் ஒழிக்கப்பட்டு, நீதியும், தர்மமும், ஒளிவீசும் என்ற தத்துவத்தை விளக்கும் இதிகாசப் பின்புலம் கொண்டது.

ஒரு நல்ல தத்துவத்தை படிப்பினையைப் புகட்டுவதற்குக் கொண்டாட ஆரம்பிக்கப்பட்ட தீபாவளிப் பண்டிகை, அதற்குரிய அர்த்தத்தையும், நோக்கத்தையும் தத்துவத்தையும் மறந்து, வெறும் உண்டுகளிக்கும், குடித்துக் கும்மாளம் போடும் தினமாக மாறித் தனக்குரிய சிறப்பை இழந்து நிற்கிறது என்பதே உண்மை.

எனினும், பலநாள் கவலையை மறந்து, ஒரு நாளாவது குதூகலமாக, மகிழ்ச்சியாக இருந்து மனதுக்குத் தெம்பு தரும்கொண்டாட்டமாக நடைமுறையில் வந்துள்ளது,

அந்த வகையில் கூட, இன்றைய தீபாவளியைக் கொண்டாட முடியாத இடர் மிகுந்த சூழ்நிலையில் ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

மக்களில் பெரும்பாலானவர்கள் தமது உறவினரை உடைமைகளை இழந்து, சொந்த வீடு வாசல்களை, பிறந்த கிராமத்தை, விட்டு நிர்க்கதியாகி உள்ளார்கள். தமிழ்க் குழந்தைகள் பலவும் பெற்றோரை இழந்து அநாதைகளாகி விட்டன. பெண்களில் பலரும் தமது நாயகர்களைப் பலிகொடுத்து பூவிழந்து, பொட்டிழந்து விதவைகளாகி, அபலைகளாகி உள்ளனர். தாய்மாரில் பலர் தமது பிள்ளைகளை இழந்து தவிக்கின்றார்கள். இவர்கள் உணவுக்கும். உடைக்கும், உறையுள்ளுக்கும் வழியின்றித் திக்கற்றவர்களாகி விட்டனர்.

இத்தகைய இருள் சூழ்ந்த வேளையில், பண்டிகை, கொண்டாட்டம், குதூகலம், மகிழ்ச்சி என்பன குறித்து நினைத்துப் பார்க்க மனம் ஒவ்வாது எமது மக்களில் பலர் அவலப்படும்போது, அவதிப்படும்போது, அனாதைகளாகி அந்தரிக்கும் வேளையில் ஒரு சிலர் தீபாவளியை விமரிசையாகக் கொண்டாட எண்ணினால் அது பெரும் மனிதநேயமற்ற ஈனத்தனம்.

ஆகையால் இன்றைய தீபாவளி, வழமையைவிட வேறு தொனிப் பொருளுடன் கொள்ளப்படவேண்டியது. நொந்து, நொடிந்து போயுள்ள மக்களின் மனதை, மேலும் வேகவைக்காமல், வெகு அடக்கமாகக் கழிக்கப்பட வேண்டியது; டாம்பீகமாக, குதூகலமாக, கும்மாளம்போட்டு களிக்கப்பட வேண்டிய நாள் அல்ல!

இதுவரை பாதிக்கப்படாத மக்கள், பாதிக்கப்பட்ட தமது சகோதரர்களுக்கு உதவி புரிவதற்கு மனம் கொள்ளவேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் நாளாக இன்றைய தீபாவளி அமைய வேண்டும். அவர்களைச் சூழ்ந்துள்ள இருள் நீங்க உதவிட வேண்டும் என்று மனதை இசையச் செய்யும் நாளாகத் தீபாவளியை மாற்றவேண்டும்.

வீடுகளில் பட்டாசு கொளுத்தி குதூகலிப்பதற்குப்பதிலாக, எங்கள் இதயங்களில் சகோதர, உணர்வுக்கு உரமூட்டி, அல்லற்படுவோர் வாழ்வில் ஒளி ஏற்றத் திடசங்கற்பம் கொள்வோமாக.

---

சனத் தொகைக்கு ஏற்ப

# உதவி அரச அதிபர் பிரிவுகளை குடாநாட்டில் அதிகரிக்க முடிவு

யாழ்ப்பாணம். அக். 17

யாழ்-மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப அதிகரிக்க வடக்கு-கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவுகளை அதிகரித்தது போன்று. உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் அதிகரித்து அதன்மூலம் மக்கள் தமது கடமைகளை விரைவாக மேற்கொள்ள வழி செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளையும் பிரித்து, மேலும் பல பிரிவுகளை உருவாக்குவது தொடர்பாக ஆலோசனைகளைச்சமர்ப்பிக்குமாறு மாகாண சபையின் உள்துறை அமைச்சு யாழ் அரச அதிபரைக் கேட்டுள்ளது.

(உ-3)

## தமிழர் கைதாகும் படலம் கொழும்பில் தொடர்கிறது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் படலம் தொடர்வதாக நேற்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை, ஆட்டுப்பட்டித்தெரு, கோட்டை, முகத்துவாரம், வெள்ளவத்தைப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் விடுதிகள் கடந்த வெள்ளி, சனி நாட்களில் முற்றுகையிடப்பட்டன.

சுமார் இருநூறுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன. அவற்றில் செல்லும் தமிழர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

தமிழர்களை கைது செய்யும் படையினர், பெருந்தொகைப்பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவிக்கும் சம்பவங்களும் பல இடங்களில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது (உ-3)

### செஞ்சிலுவைக் குறி

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் திருத்தி முடிக்கப்பட்ட கூரைகளுக்கு புதிதாக பெரிய அளவிலான செஞ்சிலுவைக் குறி பொறிக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. [ஒ-5-6]

---

# வறுமையால் குடும்பஸ்தர் தற்கொலை

தென்மராட்சி, அக் 17

குடும்பத்தின் வறுமையைச் சகிக்க முடியாத குடும்பஸ்தர் ஒருவர் அலரிக்காய் அரைத்துச் சாப்பிட்டு மரணமான சம்பவம் மறுவன்புலோவில் இடம் பெற்றுள்ளது.

கே. கிருஷ்ணன் (வயது 48) என்னும் குடும்பஸ்தரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரா மரண விசாரணை நடத்தி, தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

(ஒ - 117)

---

கொழும்பிலிருந்து வந்த

# கிளிநொச்சி உணவு லொறிகள் படையினரிடம் சிக்கிப் பட்டபாடு!

யாழ்ப்பாணம், அக். 17

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏற்றி வந்த லொறிகளைப் படையினர் அனுராதபுரம், சாலியபுர முகாமில் வைத்துபடாதபாடு படுத்தி விட்டனர்.

லொறிகளில் இருந்த பொருள்கள் அனைத்தும் இறக்கப்பட்டு, அவை 'அச்சுவேறு ஆணிவேறாக' பிரித்தெடுக்கப்பட்டு, சோதனையிடப்பட்டன அவ்வேளை லொறிச் சாரதி ஒருவரும் தாக்குதலுக்கு இலக்கானார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து 11லொறிகளில் கிளிநொச்சி மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

இந்த லொறிகள் கடந்த செவ்வாய்க்கிழமை (9-10-90) வவுனியாப் பகுதிப் படைமுகாமை அடைந்தன.

படையினர் லொறிகள் அனைத்தையும் அனுராதபுரம், சாலியபுர முகாமுக்குத் திருப்பிக் கொண்டு செல்லுமாறு பணித்தனர்.

சாலியபுரமுகாமில் வைத்து படையினர் இந்த லொறிகளையும், சாரதி மற்றும் கிளீனர்களையும் பெரும்பாடு படுத்திவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

மீண்டும் இந்த லொறிகள் வியாழக்கிழமையே கிளிநொச்சியை வந்தடைய முடிந்தது.

இந்த லொறிகளில் 40 தொன் மா, 32 தொன் அரிசி 24 தொன் சீனி என்பன கொண்டு வரப்பட்டன.

(ஒ-3-5)

---

# யுத்த நுணுக்கங்கள் நிறைந்த அமைப்பு படையினருக்கு மிக வாய்ப்பாகவே இருந்தது

(II)

சிறை வைத்தவர்களைச் சிறைப் பிடித்தால் எப்படி இருக்கும்?

யாழ் கோட்டையில் அதுதான் நடந்திருக்கிறது.

யாழ் கோட்டைக்கு நடுவே இருந்த சிறைச்சாலைகளைப் பார்த்தபோது இந்த எண்ணம்தான் வந்தது.

ஒல்லாந்தர் காலம் தொடக்கம் இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம் வரை எங்கள் இன மக்களை நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைத்த சிறைகள், இன்று "பலிலன் 2000" தாக்குதலினால் நிலைகுலைந்து போய்க் கிடந்தன.

கோட்டையைக் கைப்பற்றியதன் மூலம் எங்கள் மண்ணிலிருந்த ஆக்கிரமிப்பாளரின் மற்றொரு கூடாரம் வெற்றிகொள்ளப்பட்டு விட்டது; அடிமைச் சின்னம் உடைக்கப்பட்டு விட்டது.

அதை உணர்த்துவதுபோல கோட்டைச் சிறைக்கதவுகள் சின்னாபின்னமாகிப் பிய்ந்து, சிறைக்கூடங்கள் திறந்து கிடக்கக்காணப்பட்டன.

எட்டடிக்கு எட்டடி அளவுள்ள இந்தச் சின்னக்கூண்டுகளுக்குள்தானா எமது மக்களை அந்நியர்கள் [illegible] வைத்திருந்தார்கள்?

கோட்டைக்குள் இருந்த சிறைக்குள் அவ்வப்போது எமது மக்களை — நூற்றுக் கணக்கில் — அடைத்து வைத்திருந்தவர்கள் ஸ்ரீலங்கா படையினர்.

அவர்களை முற்றுகையிட்டு 107நாட்கள் கோட்டை சிறைக்குள் முடக்கி வைத்திருந்தார்கள் விடுதலைப் புலிகள்.

சிறை வைத்தவர்களையே சிறைப்பிடித்து சாதனை படைத்தார்கள் அவர்கள்.

கோட்டை தேவாலயத்தைப் பார்த்துவிட்டு. கோட்டைப் மதிற் பக்கமாக ஏறினோம்.

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

### ஐங்கோண அமைப்பு

ஐங்கோண அமைப்பைக் கொண்ட கோட்டையின் நான்கு புறங்களும், சுரி நிறைந்த — 30 அடிக்கும் அதிகமான அகலம் கொண்ட — அகழியால் சூழப்பட்டிருந்தன. ஐந்தாவது புறம் பண்ணைச் சந்திக்கு அருகில், மண்டைதீவை நோக்கியவாறு, கடற்கரை வீதியையும், கடற்கரையையும் எல்லையாகக் கொண்டிருந்தது.

12 அடி அகலமும் சுமார் 500 யார் நீளமும் கொண்ட கோட்டையின் சுற்று மதில் கோட்டைக்குப் பலம்மிக்க பெரும் அரணாகக் காணப்பட்டது.

இந்த மதிலின் மேற்பக்கத்தில் ஒரு [illegible] வரக் கூடிய அளவுக்குத் தொடர்ச்சியான பாதை வடிவில் சமதளம் காணப்பட்டது.

இந்த உயர்ந்த மதிலின் மேல் மண்மூடைகளை நெருக்கமாக அடுக்கி, அவற்றுக்கு நடுவே அடுத்தடுத்து நூற்றுக்கணக்கில் சென்றிகளை அமைத்து கோட்டைப் பாதுகாப்புக் கடமைகளை சிப்பாய்கள் மேற்கொண்டிருந்ததை அங்கிருந்த சென்றி அமைப்புகள் விளக்கின.

### தாக்குதல் துவாரங்கள்

உயர்ந்தமதில்களில் இருந்த இந்த சென்றிகளின் தாக்குதல் துவாரங்கள் (துப்பாக்கிகள், ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ள ஓட்டைகள்) வழியாகப் பார்த்தபோது கோட்டைக்கு வெளியே நடப்பது அப்படியே மிகத் தெளிவாகத் தெரிந்தது.

கோட்டைக்குள் வெளிப்புறத்தில் இடம்பெறும் ஒரு சின்ன அசைவுக்குக் கூட கோட்டை மதில் சென்றியிலிருந்து துல்லியமாகப் பார்த்து பதில் நடவடிக்கை எடுத்துவிடமுடியும், அவ்வளவு வாய்ப்பான வகையில் கோட்டை அமைக்கப்பட்டிருந்தது.

அது மட்டுமல்ல,

ஐங்கோணக் கோட்டையின் ஐந்துமுனைகளும் பாரிய சுடுபடைக் கலங்களை வைத்து இயக்கக் கூடிய-பெரும் சமதரைப் பகுதியை உள்ளடக்கிய - கொத்தளங்களையும் கொண்டிருந்தன.

கோட்டையின் ஒருபக்கச் சுவருக்கு வெளியே நடப்பதை, அருகில் இருக்கும் மற்றைய கொத்தளத்தில் இருந்து, பார்த்து, கண்காணித்து நடவடிக்கை எடுக்கக்கூடியதாகவும் கோட்டை அமைப்பு வசதியாக இருந்தது.

### யுத்த நுணுக்கம் நிறைந்த அமைப்பு

எந்தத் தாக்குதலையும் சமாளிக்கக்கூடிய விதத்தில் இவ்வளவு யுத்த நுணுக்கத்தோடும், பாதுகாப்பு வழிகளோடும் அமைக்கப்பட்டிருந்த கோட்டையை, தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து நிலைநிறுத்தி வைத்திருக்க முடியாமல் ஸ்ரீலங்காப்படை ஓட்டம் பிடித்தது ஏன்?

கண்ணுக்கு முன்னால்-அகழியும், அகழிக்கு வெளியே வெறுநிலமும் காணப்பட-அந்த வெட்டவெளியில் எலிவளை போன்ற பதுங்கு குழிகளை அமைத்து, புலிகளைப் போலச் செயற்பட்ட வேங்கைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல பெரும் பாதுகாப்பு அரண்களுக்குப் பின்னால் இருந்த சிங்களப்படை ஓடித் தப்பியது ஏன்?

ஒரு புறம் விமானப்படையின் வான் தாக்குதல் வசதி, மறுபக்கத்தில் கடற்படைக் கப்பல்களில் இருந்து மழை போல் பொழியும் பீரங்கிகளின் பாதுகாப்பு இவற்றுக்கு மத்தியிலும் தாக்குப் பிடிக்கமுடியாமல் கோட்டையைக் கோட்டைவிட்டு. சிங்களப்படை ஓட்டம்பிடித்தது ஏன்?

அடுத்தபகுதியில் அதனைப் பார்ப்போம், (வளரும்)

- கூர்விழியான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்காதகுண்டுகள், ஷெல்கள் குருநகரில் மக்கள் பார்வைக்கு

குருநகர், அக். 17

குருநகர்ப் பகுதியில் மீட்கப்பட்ட வெடிக்காத விமானக் குண்டுகள், பீரங்கிக் குண்டுகள், ஷெல்கள் போன்றவற்றின் ஒரு தொகுதி குருநகர் சனசமூக நிலையத்தின் முன்பாக மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின்போது குருநகர்ப்பகுதிமீது பயங்கரவிமானக் குண்டு வீச்சுக்கள், அகோர ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

அப்படி நடத்தப்பட்டதாக்குதலின்போது பல விமானக் குண்டுகள், பீரங்கிக் குண்டுகள், ஷெல்கள் வெடிக்காதிருந்தன.

அவற்றையே இப்போது குருநகர்ப் பகுதி மக்கள் மீட்டு வருகின்றனர் (ஓ-51)

# மண்எண்ணெய் கொண்டுவர தனியார் முகவருக்கு அனுமதி

## 5 லொறிகள் கொழும்பு புறப்பட்டன

யாழ்ப்பாணம், அக். 17

யாழ்ப்பாணத்தில் ஐந்து தனியார் முகவர்களுக்கு கொழும்பில் இருந்து மண்எண்ணெய் கொண்டுவருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதை அடுத்து இங்கிருந்து ஐந்து லொறிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறப்பட்டுச் சென்றுள்ளன

மாந்தனாமடம், புன்னாலைக்கட்டுவன், இருபாலை மற்றும் யாழ் நகரில் இரு முகவர்களுக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம் கிளையின்ஊடாக இந்த அனுமதியை வழங்கியிருந்ததாகத் தெரியவந்தது (ஓ-3)

## விபத்தில் போராளிமரணம்

யாழ்ப்பாணம், அக் 17

செட்டிகுளத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம் பெற்ற டிரக்டர் விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான மியாந்தன் என்பவர் மரணமடைந்தார். (உ)

## செயற்படவில்லை

ஊரடங்கு உத்தரவை அடுத்து யாழ் நகர வங்கிகள் நேற்று செயற்படவில்லை.

வங்கிகளுக்கு வந்த வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். [ஓ-3]

## 2ஆம் தர .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோட்டை வைத்திலிங்கம் வித்), ஆர். நிலாம் (யாழ். கதீஜா ம. வி), செல்வி எம் பீ. யோகேஸ்வரி (இணுவில். சைவ மகாஜனா), திருமதி ஆர். குட்டித்தம்பி (உடுப்பிட்டி மகளிர்), செல்வி சௌந்தரநாயகி சந்தையா (இளவாலை சென் ஹென்றீஸ்), ஆர். கைலைநாதன், (சாவகச்சேரி இந்து), ஏ மகாலிங்கம் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்). சகோ மேரி இனிசியா (அச்சுவேலி புனித திரேசா). செல்வி: எஸ். கந்தசாமி (கரவெட்டி திரு இருதயக்கல்லூரி).

திருமதி ரி பாலசிங்கம் (காரைநகர் தியாகராஜா ம. ம. வி.), திருமதி வீ மாரிமுத்து பருத்தித்துறை (வேலாயுதம் மகா வித்தியாலயம்), ரி நடராசலிங்கம் (மயிலிட்டி றோ. க த க.), எவ். எஸ் ஆர் ஜி ஆசீர்வாதம் (இளவாலை சென். ஹென்றீஸ்). திருமதி எஸ். ஜெயக்குமார் (சாவகச்சேரி மகளிர்). வீ. திருநாவுக்கரசு (உரும்பிராய் சைவத் தமிழ் வித்.), திருமதி செல்லம்மா பத்மநாதன் (கச்சாய் அ. த. க.], கே பேரின்பநாயகம் (மண்டைதீவு ம வி), கே. சதாசிவம், (காரை சுந்தரமூர்த்தி வித்), ஜே. ஜேசுநாதன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயா).

ரி. முத்துக்குமாரசாமி (நாவற்குழி ம. வி.), திருமதி அமிர்தயோகம் முத்துக்குமாரசாமி (பன்னாலை சேர், கனகசபை வித்.), எஸ் பரராசா (சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா), வீ சச்சிதானந்தன் (யாழ்; கல்வித் திணைக்களம்), ஏ. ஸ்ரீக்குமரன் (இளவாலை சென். ஹென்றீஸ்), வீ. சண்முகராஜா [சாவகச்சேரி இந்து], எஸ். சுப்பிரமணியம் [மீசாலை விக்னேஸ்வரா], வீ. சிற்றம்பலம் [மாதகல் புனித யோசேப் வித்], பீ எம். ஜே அந்தோனி [யாழ்-புனிதமேரி றோ. க. த. க.], திருமதி நாகேஸ்வரி பரமலிங்கம் [கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.], (தொடரும்)

## மின்சாரம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என்றும்- மின்சாரப் பகுதியினர் எச்சரிக்கின்றனர்.

எனவே, சேதங்கள் ஏற்பட்டிருந்தால், உடனடியாக யாழ். மாநகர சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு. திருத்த வேலைகளைச் செய்து கொள்ளுங்கள்.

அசட்டையாக இருந்தீர்களேயானால், வீணான உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடலாம்! கவனம்!! (ஓ-3)

## வலி. வடக்கில்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்று தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

தெல்லிப்பழைக்கு அப்பாலான பகுதிகள் நேற்று சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன (ஓ-68)

## இன்றைய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்ட இத்தருணத்தில், கோடானுகோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ள இவ்வேளையில், சகஜ வாழ்வு முற்றாக ஸ்தம்பித்து நாட்களைக் கழிப்பதே சஷ்டமாக உள்ள இந்த யுத்த காலத்தில் பண்டிகைகள் எதற்கு? எப்படிக் கொண்டாடுவது? — என்ற கேள்விகளே மக்களிடம் பரவலாக எழுந்தன.

ஆலய வழிபாட்டுடன் மிக அடக்கமாக தீபாவளியைக் [illegible] என்ற கருத்து மக்களிடையே மேலோங்கி நின்றது. [அ]

# படகு மீது படையினர் சூடு; பெண்மணி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், அக் 17

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை துறைப்பகுதியில் கடந்த திங்களன்று படகில் சென்ற பொதுமக்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண்மணி உயிரிழந்தார். நான்கு பேர் காயமுற்றனர்

செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த சணபதிப்பிள்ளை பூரணம் (வயது 45) என்ற பெண்மணியே உயிரிழந்தவராவார்

செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த க செல்வராணி (வயது 18), பழுகாமத்தைச் சேர்ந்தவர்களான முத்தன் குணம் (வயது 16), கந்தப்பர் நடராசா (வயது 18) ஆகியோர் உட்பட நால்வர் காயமுற்றனர். (உ)

## பலாலி...

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுகளை வீசியது.

பிற்பகல் 4 30 மணியளவில் மீண்டும் வந்த அவ்ரோ காங்கேசன்துறை. மாவிட்டபுரம் பகுதிகளில் 4 குண்டுகளைப் பொழிந்து தள்ளியது.

குண்டு வீச்சு அதிர்வினால் இப்பகுதிகள் அதிர்ந்தன.

குண்டு வீச்சினால் இந்தப் பகுதிகளில் அனேக வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது

இதேவேளை—

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவிலும் கட்டுவன் பகுதியில் பொம்மர் தாக்குதல் இடம் பெற்றது. (ஓ-68)

## ஈழத் தமிழ் அகதிகளுக்கு ரூ. 12 கோடி!

இலங்கை தமிழ் அகதிகளின் மறு வாழ்வுக்காக தமிழக அரசு இதுவரை 12 கோடி ரூபா செலவிட்டுள்ளது என்றும்—

மேலும் நான்கு கோடி ரூபாவை மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதாகவும் தமிழக மறுவாழ்வுத் துறை அமைச்சர் கே.என். நேரு நேற்றுத் தெரிவித்தார். (ஓ-எ)

# மரண அறிவித்தல்கள்

## சாமி ஆச்சாரி திருநாவுக்கரசு

சாமி ஆச்சாரி திருநாவுக்கரசு நேற்று சிவபதமடைந்துவிட்டார் இவர் [அரசு மோட்டோர்ஸ் வேக்ஸ்] உரிமையாளரும், வியாகம்மாவின் அன்புக் கணவரும், மனோகரன் [பிரான்ஸ்], சந்திரசேகரன், பாஸ்கரன், சுதாகரன், மனோரஞ்சினி [ஆசிரியை, வவுனியா பண்டாரிக்குளம் அ த.க. பாடசாலை], குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாருடைய இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

அரசு மோட்டோர்ஸ் வேக்ஸ்.
22. பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (14252)

## துரைராசா ரவி

குருநகர் 2 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த சவுரியான் இம்மனுவல் (துரைராசா ரவி) 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிரீக்குடாவில் அகாலமரணமானார்

இவர் பெல்சியாவின் அன்புக் கணவரும், துரைராசா – சீலி தம்பதிகளின் அருமை மகனும், ஆசீர்வாதம் – றோஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், நவின், நவினாவின் அருமைத் தந்தையும், பொன்றோஸ், வில்லி, வவி, ஜீவா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னத்துரை, செல்வம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16 ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. அன்ரனி (வவி)
சகோதரன்

461/3 மவுண்கார்மல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். [14482]

## சங்கரப்பிள்ளை நல்லையா
(பரஞ்சோதி மாஸ்டர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை நல்லையா [இளைப்பாறிய ஆசிரியர், திருநெல்வேலி இ. த. க பாடசாலை] காலமாகி விட்டார். இவர் அழகம்மாவின் [இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்] அன்புக் கணவரும், அங்கையற்கண்ணி [ஆசிரியை. நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை], சிறீதரன் [லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்], பகீரதன், அனித்தாகினி [விலங்கியல் பீடம். யாழ். பல்கலைக்கழகம்], காலஞ்சென்ற பாஸ்கரன் [குட்டி, கரன்], அனுராதா [யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அருமைத் தந்தையும், ராதாகிருஷ்ணனின் [எயர் லங்கா, கட்டுநாயக்கா] அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-10-90 [இன்று] புதன்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கணக்கர்மட மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சிறீதரன்

25, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு. (14258)


# PATRICIAN INSTITUTES

அகில உலக கெயார் ஸ்தாபனத்தின் (Care Inter-National) உதவியுடன் நடைபெற்றுவந்த மரவேலை, கட்டுவேலைப் பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருப்பதால் இதில் பயின்று வந்த மாணவர்களை 22-10-90 திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

எமது நிறுவனத்தில் நடைபெற்று வந்த பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 22-10-90 திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

1. Electrical Wiring (மின்சார இணைப்பு)
2. Motor Mechanism (மோட்டர் மெக்கானிசம்)
3. Motor Winding (மோட்டர் வைண்டிங்)
4. Short-hand and Typing (தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்)
5. Computer Programming Courses [கம்பியூட்டர் பயிற்சிகள்]

பதிவாளர்
பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்,
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்
[சி-5316]



## பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

கடந்த சில மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த விரிவுரைகள் யாவும் மீண்டும் 20 – 10 – 1990ல் ஆரம்பமாகின்றன என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குநர்
பட்டபபடிப்புகள் கலலூரி.

குறிப்பு: இதுவரை பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் 20 - 10 - 90 க்கு முன்னர் எமது தற்காலிக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இ. சத்தீஸ்வரன்,
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கருகாமை,
உடுவில் கிழக்கு சுன்னாகம்.
(14473)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். நாவலர் வீதி 298/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-10 1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org